ஓய்வூதியச் சுற்றறிக்கை இல: 2/2017

எனது இல: ஓதி/ சுற்றறிக்கை/2017
ஓய்வூதியத் திணைக்களம்
மாளிகாவத்தை
கொழும்பு 10
06.10.2017

அனைத்து
அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் / முப்படைத் தளபதிகள்
மாவட்டச் செயலாளர்கள்,
பிரதேச செயலாளர்கள்,
உள்ளூராட்சித் தலைவர்கள்

**இயங்கலை ஊடாக (online) அரச சேவைகள் சேமலாப நிதிய திட்டத்தின் கீழ் அங்கத்தவர் பதிவுகளை மேம்படுத்தலும் பதிவு செய்யப்பட அங்கத்தவர்களது பங்களிப்புத் தகவல்களை இற்றைப்படுத்தலும்**

இச்சுற்றறிக்கையானது 2015.07.23 ஆம் திகதி வெளியிடப்பட்ட 07/2015 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் 5 ஆம் மற்றும் 8 ஆம் பிரிவுகளை அகற்றி அரச சேவைகள் சேமலாப நிதியத்தியத்திற்கான அறிவுறுத்தல் கையேட்டின் கீழ் அதைப் பிரதியீடு செய்யும் வகையில் என்னால் வெளியிடப்படுகிறது.

மேற்கூறப்பட்ட ஆளணித் தொகுதியின் அரச உத்தியோகத்தர்களை அரச சேவை சேமலாப நிதியத்திற்கு பதிவு செய்யும் செயற்பாட்டை மேற்கொள்வதற்கான நிதிசார் நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்கும் மாதாந்தம் காசோலையுடன் அனுப்பி வைக்கப்படும் பங்களிப்பு தகவல்களை இயங்கலை ஊடாகப் பெற்றுக் கொள்வதற்குமான வசதி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. www.pensions.gov.lk எனும் ஓய்வூதியத் திணைக்கள இணையத்தளத்தின் PMS இன் (ஓய்வூதிய முகாமைத்துவத் தொகுதி ) ஊடாக மேலே கூறப்பட்ட சேவைக்கான இணைப்பைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## 02. இயங்கலைச் சேவையினை அணுகல்

02.1 ஆரம்பத்தில் இச்சேவைகளைப் பெறும் பொழுது, தொடர்புள்ள நிறுவனங்கள் மற்றும் அலுவலர்கள் தம்மைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்பதுடன் தரப்படும் கடவுச் சொல்லைப் பயன்படுத்தி தளத்தினுள் பிரவேசிக்க முடியும். இது நடைமுறையிலுள்ள வி.அ.ஓ பதிவுக்குப் பயன்படுத்தப்படும் மென்பொருள் தொகுதிக்கு மேலான சேவை என்பதுடன் ஏற்கனவே அ.சே.சே.நி இல் பதிவு செய்யப்பட்ட அரச நிறுவனங்கள் மீண்டும் பதிவு செய்வது அவசியமற்றதாகும்.

## 03. நிதியத்தின் உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ளல்

03.1 பழைய நடைமுறையைப் பின்பற்றி தொடர்ந்து அனுப்பிவைக்கப்படும் PD1N மற்றும் PD2N படிவங்கள் 2017.10.08 ஆம் திகதிலிருந்து அனுப்பி வைக்கத் தேவையில்லை என்பதுடன் ஓய்வூதியத் திணைக்கள வலைத்தளத்தில் அரச சேவை சேமலாப நிதியத்தில்

பதிவு செய்வதற்கான பொருத்தமான தரவுகளை வழங்கி உறுப்புரிமை இலக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இத்திட்டத்தின கீழ் அரச சேவை சேமலாப நிதியதிற்கான உறுப்புரிமை இலக்கம் தன்னிச்சையாகவே வழங்கப்படும். அரச சேவைகள் சேமலாப நிதியத்தில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களும் இப்பதிவு செய்தல் செயல்முறையில் தொடர்புடைய விபரங்களைப் பூரணமாக வழங்கி அரச சேவைகள் சேமலாப நிதியத்தின் புதிய உறுப்புரிமை இலக்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
அத்துடன் முன்னைய உறுப்புரிமை இலக்கம் எனக் குறிப்பிடப்பட இடத்தில் பழைய உறுப்புரிமை இலக்கத்தைப் பதிவது கட்டாயமானதாகும். (பழைய உறுப்புரிமை இலக்கம் பதியாதுவிடின், கடந்த சேவைகாலத் தகவல்கள் இன்மையால் உரித்துக்களைப் பெற்றுக் கொள்ள முற்படும் போது பாதிப்பு ஏற்படும்).

03.2 மேலே கூறப்பட்ட மென்பொருள் பயன்படுத்தல் தொடர்பில் முழுமையான அறிவுறுத்தல்கள் அடங்கிய கையேடு இணைப்பு 01 இல் தரப்பட்டுள்ளது.

03.3 பொருத்தமான தகவல்கள் வழங்கப்பட்ட பிற்பாடு திரையில் இரண்டு உறுப்புரிமை விண்ணப்பப் பிரதிகள் தோன்றும். அவை திணைக்களத் தலைவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிற்பாடு ஒரு விண்ணப்பப் படிவம் சுயவிபரக் கோவையில் இணைக்கப்படுவதுடன் மற்றையது ஓய்வூதியத் திணைக்களத்தின் அரச சேவை சேமலாப நிதியதிற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பங்களிப்பாளரின் உறுப்புரிமை இலக்கத்தைப் பங்களிப்பாளருக்குத் தெரிவிப்பது நிறுவனத் தலைவர்களின் பொறுப்பாவதுடன் இத்தகவல்கள் சம்பந்தப்பட்ட அலுவலரின் வரலாற்றுத் தாளில் பதிவு செய்யப்பட வேண்டும். பங்களிப்புகள் தொடர்பிலான விசாரணைகளின் போது, பங்களிப்புகளை மீளளிப்புச் செய்யும் போது அல்லது அ.சே.சே.நிதியத்துடனான ஏதாவது கடித பரிமாற்றங்களின் போது உறுப்புரிமை இலக்கம் குறிப்பிடப்படுவது கட்டாயமானதாகும். பதிவுகள் யாவும் பூரணமாக முடிவுற்றதும் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பதிவிலக்கம் ஆகியவற்றை பதிவிடுவதன் மூலம் சம்பந்தப்பட்ட அங்கத்தவரின் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## 04. பங்களிப்பை அனுப்பும் முறை

04.1. மத்திய அரசாங்கத்தின் மாகாண சபைகள் அல்லது உள்ளூர் அதிகார சபைகள் அகிய நிறுவனங்கள் பங்களிப்பை அனுப்புகையில் ஒவ்வொரு மாதமும் கட்டாய தொகையாக எட்டு வீதம் (8%) மற்றும் அரச ஊக்கத் தொகையாக பன்னிரெண்டு வீதம்(12%) ஆகியவற்றை அறவிட்டு காசோலையாக மாத்திரம் அனுப்பிவைத்தல் வேண்டும். ஆகையால் நியமன அதிகாரிகள் அரசு பாதீட்டில் இருந்தோ அல்லது வேறு மூலங்களினூடாகவோ தேவையான ஒதுக்கீடுகளை பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

04.2. காசோலை அனுப்பும் போது "தவிசாளர், அரச சேவைகள் சேமலாப நிதியம்" எனும் பெயருக்கு வரைந்து அனுப்பி வைக்க வேண்டும். காசோலையுடன் கணனி தொகுதியில் இருந்து பெறப்பட்ட மாதாந்தப் பங்களிப்பு விபரத்தின் பிரதி கட்டாயமாக இணைக்கப்பட வேண்டும்.

04.3. இத்துடன் இணைக்கப்பட்ட இணைப்பில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றி உறுப்பினர்களுக்கான கட்டாய பங்களிப்புத் தொகையான 8% மற்றும் அரச ஊக்கத் தொகையான 12% ஆகியவற்றைத் தனித்தனியாக சம்பந்தப்பட்ட அங்கத்தவரின் மாதாந்த பட்டியலில் குறிப்பிட வேண்டும் என்பதுடன் பதிவு செய்யப்பட தொகை காசோலையில் குறிப்பிடப்பட்ட தொகைக்கு சமமாக இருத்தல் வேண்டும். பதிவு இலக்கம் பெறாத எந்தவொரு

அங்கத்தவர்களுக்கும் பங்களிப்பு தகவல் சேர்க்க முடியாததால் பங்களிப்புத் தொகை அனுப்புவதற்கு முன்பாக அ.சே.சே.நிதியத்தில் பதிவு செய்து உறுப்புரிமை இலக்கத்தைப் பெறுதல் வேண்டும்.(நியமனம் பெற்ற உடன்)

04.4. ஒரு நிறுவனத்தால் ஒவ்வொரு அலுவலர்களிடமிருந்தும் அறவிடப்பட்ட பங்களிப்புத் தொகைக்கு தனித்தனிக் காசோலைகள் அனுப்பி வைப்பதற்குப் பதிலாக அங்கத்தவர்களின் பங்களிப்புத் தொகை விபரங்களைப் பட்டியலிட்டு அப்பட்டியலுடன் அனைத்து அங்கத்தவர்களுக்குமாக ஒரு காசோலையை அனுப்பி வைத்தல் வேண்டும்.

04.5. அரச சேவைகள் சேமலாப நிதியத்தின் ஒவ்வொரு மாதத்தின் பங்களிப்புத் தொகையும் தொடர்ந்து வரும் மாதத்தின் 10 ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்கப்படுவது மத்திய அரசாங்கம், மாகாண சபைகள், உள்ளூர் அதிகார சபைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் பிரதம கணக்காளரின் கடமையாகும்.

04.6. சேகரித்துக் கொள்ளப்பட்ட பங்களிப்புத் தொகைகள் ஒவ்வொரு நிறுவனத்தினதும் பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்படுவதாகத் தகவல்கள் பதிவாகியுள்ளதுடன் இவை அரச கணக்காய்வாளரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட அங்கத்தவர்களிடமிருந்து அறவிடப்பட்ட பங்களிப்புத் தொகையை முழுமையாக நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதைக் கண்காணிப்பது பிரதம கணக்காளர் மற்றும் கணக்காளரது கடமையாகும்.

04.7 எதிர்காலத்தில் தரவுத்தளத்தை இற்றைப்படுத்திய பின்னர் ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் அவர்களது தனி நபர் கணக்கின் மீதி தொடர்பான விபரங்களை அறிவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

05. இங்கு குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கும் விழிப்பணர்வை ஏற்படுத்தி அரச சேவை சேமலாப நிதிய நலன்களுக்கான கொடுப்பனவுகளைத் துரிதப்படுத்துவதற்கு தங்களது ஒத்துழைப்பு மிகவும் பெறுமதி வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

06. இச்சுற்றறிக்கையானது 2017/10/08 ஆம் திகதியிலிருந்து வலுப்பெறும். இத்திகதிக்குப் பின்னர் பழைய நடைமுறையின் கீழ் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

07. புதிய செயற்றிட்டத்தின் கீழ் பதிவுகளை மேற்கொள்ளும் போது எழும் பிரச்சனைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்காக கீழே தரப்பட்ட தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**அரச சேவை சேமலாப நிதியம் பற்றிய தகவல்கள்(அரச சேவை சேமலாப நிதியப் பிரிவு)**

| | | |
|---|---|---|
| செயலாளர் மற்றும் கணக்காளர் | நேரடித் தொடர்பு | 011-2324375 |
| நிர்வாக உத்தியோகத்தர் | நேரடித் தொடர்பு | 011-2325008 |

**கணனித் தொகுதி செயற்றிட்டம் தொடர்பான தகவல்கள்(தகவல் தொழில்நுட்பப் பிரிவு)**
தொலைபேசி இலக்கம் 011-5920403, 011-2320049 மின்னஞ்சல் inquiries.pms.@pensions.gov.lk

08. இச்சுற்றுநிருபம் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சுச் செயலாளரின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

**ஒப்பம்**
**ஏ. ஜகத் டி டயஸ்**
**ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்**

பிரதிகள்:

1. ஜனாதிபதியின் செயலாளர் - த.த.த
2. பிரதமரது செயலாளர் - த.த.த
3. அமைச்சரவைச் செயலாளர் - த.த.த
4. பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் - த.த.த
5. நிதி மற்றும் மக்கள் தொடர்பாடல் அமைச்சின் செயலாளர் - த.த.த
6. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் - த.த.த
7. கணக்காய்வாளர் நாயகம் - த.த.த